[பிற்பகல் 1.40]

8. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று (14-2-1979) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டபடி பேரவையின் நிகழ்ச்சி நிரல்.

15-2-1979 (வியாழன்) 16-2-1979 (வெள்ளி)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்- தொடர்ச்சி— இந்த இரண்டு நாட்களிலும் அவை காலை 9 முதல் பிற்பகல் 1.30 வரையிலும், மாலை 4 முதல் 7 மணி வரையிலும் கூடும். இந்நாட்களில் கேள்வி நேரம் இருக்காது.
17-2-1979 (சனிக்கிழமை)	45–வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்திற்கான தீர்மானம்— விவாதம். அவசரச் சட்டங்களுக்கான சட்டமுன் வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.
18-2-1979 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
19-2-1979 (திங்கட்கிழமை) 20-2-1979 (செவ்வாய்க்கிழமை 21-2-1979 (புதன்கிழமை)	அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்; மற்றும் அமைச்சரவையின் ஒரு கொள்கையை மறுக்கும் தீர்மானங்கள்— விவாதம்.
22-2-1979 (வியாழக்கிழமை) 23-2-1979 (வெள்ளிக்கிழமை) 24-2-1979 (சனிக்கிழமை)	சட்ட முன்வடிவுகள் - ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.

1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முக்கிய அலுவல் காரணமாக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருப்பதாலும், அலுவல் ஆய்வுக் குழுவில் பல்வேறு கட்சித்தலைவர்கள், மேலும் பல உறுப்பினர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதின் காரணமாகவும், பேரவைத் தலைவர் 15-2-79, 16-2-79 ஆகிய இரண்டு நாட்களிலும் கேள்வி நேரத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று ஆலோசனை

கூறியதன் காரணமாகவும், அதை ஏற்று அந்த இரண்டு நாட்களிலும் கேள்வி நேரத்தைத்தள்ளி வைப்பதென்றும், மேலும் பேரவை இரண்டு நாட்களிலும் மாலையிலும் அவைக் கூட்டத்தை வைத்துக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

24-2-1979 அன்று பேரவை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும், 3-3-1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்— எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

25. தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்ற அதிகாரிகள் (இரண்டாவது திருத்த) சட்டத்தின் 2, 4, 5, 9 ஆம் பிரிவுகள் செயலுக்கு வரும் தேதியினை நிர்ணயிப்பது குறித்து, 11-7-1978ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 1126-ல் வெளியான அறிவிப்பு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS